ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2286/22 – 2022 ජූනි මස 29 වැනි බදාදා – 2022.06.29
2286/22 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை**

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்டுள்ள உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் ஆததி நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபணையும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
தலைவர்,
போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை.

"மெஹெவர பியெச",
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2022, யூன் 15.

1A – G37019 – 09 (2022/06)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1958 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 11605 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறானவையும், 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2080/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் கடைசியாக, வேறுபடுத்தப்பட்டுள்ளவாறானவையும் முடிபுகள், கீழே காட்டப்பட்டுள்ளவாறு அட்டவணையின் நிரல் II க்குப் பதிலாகப் பின்வரும் புதிய நிரலினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

### பாகம் II

### வேலையாளர் வகுப்பு

**(அ) வகுப்பு வேலையாட்கள்**

முகாரி (Foreman), பிரதான, போரணையாளர், பிரதான பாஸ் மார், சமையலாளர்கள், சிறு உணவுகள் தயாரிப்போர், பேஸ்ட்ரீ (pastry) செய்பவர்கள், கேக் அலங்கரிப்பவர்கள்.

**(ஆ) வகுப்பு வேலையாட்கள்**

மாவைக் கலப்பவர்கள், அளப்பவர் மற்றும் நிறுப்பவர், தட்டுக்களில் அடுக்குபவர், உணவுப்பண்டத்தை முறுக்கிய வடிவமாக்குபவர், பை (Pie) தயாரிப்பவர், பேஸ்ட்ரீ (pastry) செய்பவர்கள், பை (Pie) தயாரிக்கும் இயந்திரத்தை இயக்குபவர், பொரிப்பவர், பட்டர் மற்றும் ஐசிங் சீனி கலப்பவர், பொதி செய்யும் இயந்திரம் இயக்குபவர்.

**(இ) வகுப்பு வேலையாட்கள்**

மா கொட்டுபவர், மா சலிப்பவர், உருட்டல் இயந்திரம் இயக்குபவர், சீனி அரைப்பவர், தட்டுக்களுக்கு எண்ணெய் பூசுபவர், பனியர்ஸ் (Panniers), தட்டுக்களில் வேகவைக்காத பாணை அடுக்குபவர், தட்டுக்களில் வேகவைக்காத பணிஸ்களை அடுக்குபவர், தட்டுக்களில் வேகவைக்காத கேக்குகளை அடுக்குபவர், பாண் வெட்டுபவர், மரக்கறிகள் மற்றும் பழவகைகளைச் சுத்தப்படுத்துபவர்கள், இனிப்புக் கூழ் நிரப்புபவர் (cream filler), போரணை உதவியாளர்கள், போரணையில் ஏற்றுபவர்கள், தட்டுகளை அடுக்குபவர், பாண் மற்றும் பணிஸ் அடுக்குபவர்கள், வெட்டுபவர்கள், பாணின் மேற்பகுதியினை நீக்குபவர் (crust cleaner), பொதிகளைச் கைகால் சுற்றுபவர் (hand wrappers) பொதி செய்பவர்கள், பொது உதவியாளர் மற்றும் விநியோகம் செய்பவர்.

**மாதமொன்றுக்குக் கொடுபட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | ''ஏ'' வகுப்பு<br>ரூ. ச. | ''பீ'' வகுப்பு<br>ரூ. ச. | ''சீ'' வகுப்பு<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 21,166.00 | 19,333.00 | 17,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 21,316.00 | 19,458.00 | 17,600.00 |
| 3 ஆம் ஆண்டு | 21,466.00 | 19,583.00 | 17,700.00 |
| 4 ஆம் ஆண்டு | 21,616.00 | 19,708.00 | 17,800.00 |
| 5 ஆம் ஆண்டு | 21,766.00 | 19,833.00 | 17,900.00 |
| 6 ஆம் ஆண்டு | 21,916.00 | 19,958.00 | 18,000.00 |
| 7 ஆம் ஆண்டு | 22,066.00 | 20,083.00 | 18,100.00 |
| 8 ஆம் ஆண்டு | 22,216.00 | 20,208.00 | 18,200.00 |
| 9 ஆம் ஆண்டு | 22,366.00 | 20,333.00 | 18,300.00 |
| 10 ஆம் ஆண்டு | 22,516.00 | 20,458.00 | 18,400.00 |
| 11 ஆம் ஆண்டு | 22,666.00 | 20,583.00 | 18,500.00 |

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

*அறிவித்தல்*

**கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபை**

*கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் தீர்மானங்களை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச்சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறப்பட்டுள்ள உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*அத்தகைய ஒவ்வோர் ஆட்சேபணையும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
*தலைவர்,*
*கறுவாத் தொழிலுக்கான,*
*சம்பளச் சபை.*

*"மெஹெவர பியெச"*
*தெகழில் திணைக்களம்,*
*கொழும்பு 05,*
*2022, மே 23.*

**அட்டவணை**

*கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்வையும், 1959 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய 11732 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதிய 1872/31 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவைவயுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

II **ஆம் பாகம்**

I. *ஆம் நிரலிற் குறிப்பிடப்பட்டுள்ள வேலையாளருக்கு இயைபுடைய நேரவேலைக்குரிய ஆக்ககுறைந்த சம்பள வீதம்* II *ஆம் பந்தியில் அவ்வேலையாளருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள வீதமாகும்.*

| *நிரல் I*<br>*விபரம்* | *நிரல் II*<br>*ஆகக்குறைந்த சம்பள வீதம் (ரூ.ச.)* |
|---|---|
| **நேர வீதங்கள் - ஒரு நாளைக்கு** | |
| கிளைகள் வெட்டுதல், காண் வெட்டுதல், படி கட்டுதல், களை பிடுங்குதல், இலுக்குப்புல்லை அகற்றுதல், எல்லைகளை துப்பரவு செய்தல் | |
| ஒரு ஆண் /பெண் வேலையாளிக்கு | 730.00 |
| **கறுவா உரித்தல் - ஒரு நாளைக்கு** | |
| ஒரு ஆண் /பெண் வேலையாளிக்கு | 782.00 |
| **துண்டு வீதம்** | |
| கிளை வெட்டுதல் - ஒரு ஹெக்டயாருக்கு | 16,511.00 |
| காண் வெட்டுதல் - 18" X 18" கொண்ட 10 மீற்றர் காணுக்கு | 312.00 |
| வருடாந்தம் களை பிடுங்குதல் - ஒரு ஹெக்டயாருக்கு | 14,773.00 |

EOG - 06 -0212/ 2

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

*அறிவித்தல்*

*பூக்கள், அழகுத் தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றைப் பயிர் செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்குமான தொழில்*

*தொழில் அமைச்சர் அவர்களினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2015 ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதிய 1916/12 ஆம் இலக்க அதிவிசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையொன்றின் வாயிலாக எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தினால் தொழில் ஆணையாளர் நாயகம், பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி ஆகிய நான் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் பூக்கள், அழகுத் தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றைப் பயிர் செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நாளாந்த வேலை தொடர்பாக இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிற் கூறப்பட்டுள்ள ஆகக் குறைந்த சம்பள அளவு விகிதங்களை நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என அக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.*

*மேற் கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

**பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,**
*தலைவர்,*
*கறுவாத் தொழிலுக்கான,*
*சம்பளச் சபை.*

*“மெஹெவர பியெச”*
*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 05,*
*2022, யூன் 20.*

**அட்டவணை**

*பூக்கள், அழகுத் தாவரங்கள், மரக்கறிகள், மற்றும் பழங்கள் போன்றவற்றைப் பயிர் செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்குமான தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 2012 ஆம் ஆண்டு மாச்சு 09 ஆந் திகதிய 1748/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2017 ஆந் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதிய 2028/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் இறுதியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளனவுமான தீர்மானங்கள் கீழே அட்டணையில் உள்ளவாறு மேலும் வேறுபடுத்தப்படும்.*

*I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்குப் பொருத்துவதான சாதாரண வேலை நாளொன்றிற்கான கீழெல்லை திரட்டிய சம்பள வீதம் அவர்களுக்கெதிரே II ஆம் நிரலிற் கூறப்பட்டுள்ளவாறானவையாக இருத்தல் வேண்டும்.*

**பகுதி I**

**வேலையாளர் வகுப்பு**

**தேர்ச்சியுடையோர்**

*விதை மற்றும் இழையம் வளர்ப்போர்கள், தாவரப்பகுதிகளை ஒட்டும் வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், பூத்தாவரங்கள், பூக்கள் மற்றும் கிளைகளை விற்பதற்காகவும் ஏற்றுமதி செய்வதற்காகவும் ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், அழகுத் தாவரங்கள் மற்றும் தாவரப்பகுதிகளை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், தரக்கட்டுப்பாட்டாளர்கள், பங்கசுக் கொல்லிகள், பூச்சிகொல்லிகள் தெளித்தல் மற்றும் பசளையிடும் வேலைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், பொதி*

செய்வோர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், நிர்வாக வேலையாட்களுக்குப் பொறுப்பான ஆட்கள், பயிற்சி தேவைப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடும் வேலையாட்கள்.

**ஓரளவு தேர்ச்சியுடையோர்**

நாற்றுமேடையைத் தயாரிப்பதில், விதைகளை நாட்டுதல் மற்றும் பராமரித்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள், உற்பத்தியை அறுவடை செய்பவர்கள் மற்றும் சேகரிப்பவர்கள், களஞ்சிய உதவியாளர்கள், ஓரளவு தேர்ச்சியுடைய பிற வேலையாட்கள்.

**தேர்ச்சியற்றோர்**

தாவரங்கள் நாட்டும் நிலத்தைத் தயாரிப்பதில் உள்ள வேலையாட் கள், பொதிகளை ஏற்றும் மற்றும் இறக்கும் தொழிலாளர்கள், பயிற்சி தேவைப்படாத வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

## பகுதி II

### ஆகக் குறைந்த சம்பள விகிதங்கள்

| *வேலையாளர் வகுப்பு* | *ஆகக் குறைந்த நாட் சம்பளம்* |
|---|---|
| தேர்ச்சியுடையோர் | ரூபா 500.00 |
| ஓரளவு தேர்ச்சியுடையோர் | ரூபா 575.00 |
| ஓரளவு தேர்ச்சியுடையோர் | ரூபா 625.00 |

EOG - 06 -0212/ 3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.